**தலைப்பு 238 – அரசிறை கொள்கை திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசிறை கொள்கை திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அரசிறை கொள்கை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) அரசிறை கொள்கை திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காமை

2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்படுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் சொத்துப் பதிவேடு மற்றும் 2016 சனவரி 01 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் 03 சொத்து உருப்படிகள் பெறுமானத்திற்கு இடையே காணப்பட்ட ரூபா 10,226,463 ஆன வேறுபாடு இனங்காணப்பட்டு ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை | அம்மீதிகளின் வேறுபாட்டிற்கு காரணங்கள் இனங்காணப்பட்டு ஒப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உங்களது அவதானிப்புடன் இணங்குகின்றேன். நடைமுறையல்லாத சொத்துக்கள் புதிய கொள்வனவு தவிர ஏனைய நிறுவனங்களிடமிருந்து அவ்வாண்டில் பெறுவனவுகளை பதிவு செய்யும் போது அது ஆரம்ப மீதியாக சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்தில் பதிவு செய்யடுகின்றது. ஆதலால் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகள் கணக்கில் 2018 சனவரி 01 இல் உள்ளவாறு மீதிகளுக்கு இடையே அவ்வாறான வேறுபாடு தென்படுகின்றது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

**பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் ரூபா 4,071.68 மில்லியனான கட்டுநிதி கோருவதற்காக திட்டமிடப் பட்டிருந்ததுடன் ரூபா 89.91 மில்லியன் கோரப்பட்டிருந்ததுடன் எனினும் திறைசேரியால் ரூபா 61.41 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | கட்டுநிதி முறைப்படி திட்டமிடுவதற்கும் கட்டுநிதி முகாமைத்துவத்தை ஆக்கபூர்வமாக மேகொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 4 மில்லியன் தொகை பிரீமா லங்கா (தனியார்) கம்பனிக்கான கொடுப்பனவிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அந்நிறுவனத்துடன் இதுவரை உடன்படிக்கை கைச்சாத்திடாமையால் இப்பணத்தை கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. |

### 2.2 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **வருமான குறியீடு மற்றும் வருமான குறியீடு விபரம் - சமூக பொறுப்பு வரி 10.02.10.00** | | | |
| (அ) | 2018 திசெம்பர் 31 வரை மேற்படி வருமானக் கணக்கிற்குரியதாக ரூபா 64,802,267 தொகை நிலுவையாகக் காணப்பட்டதுடன் இம்மீதியில் 05 ஆண்டுகளை மிகைத்த ரூபா 63,012,706 ஆன மீதியொன்று காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 128(உ) பிரகாரம் அரசிற்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை வருமானத்தை தாமதமின்றி சேகரித்துக் கொள்ளல் தொடர்பான விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ளல். | இச்சமூக பொறுப்பு வரி 2011 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்ட வரியாக இருந்ததுடன் அதில் கொடுப்பனவு செய்யப்படவுள்ள வருமானம் மாத்திரம் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 128(உ) பிரகாரம் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக செயற்படும் கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் திணைக்களத்தில் விசாரித்து கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் திணைக்களத்தில் விசாரித்து அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை தாமதமின்றி | - மேற்படி - | இந்நிலுவை தொகைகுரிய அட்டவணைகளை கருததிற் கொள்ளும் போது சகல பெறுமதிகளும் மிகவும் பழைய நிறுவனங்களுக்குரிய திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகிய இரண்டு நிறுவனங்களிடமிருந்து அப்பணம் அறவிடப்பட |

| | | |
|---|---|---|
| சேகரிப்பதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக போதியளவு தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | வேண்டியிருந்தது. |

**2.3 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நி.பி 66 மாற்றங்களுக்கான அங்கீகாரம் கிடைப்பதற்கு முன்னர் ஒரு செலவின விடயத்திற்குரியதல்லாத வெளிநாட்டு சுற்றுலாவிற்கான அமையக் கொடுப்பனவிற்காகவும் விமானப் பிரயாணச் அனுமதிப்பத்திரக் கட்டணக் கொடுப்பனவிற்காகவும் ரூபா 845,395 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களுக்கான முறையான அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் குறித்த செலவின விடயங்களிலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெளிநாட்டு பிரயாணச் செலவின விடயத்தில் நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமையால் பாதீட்டு திணைக்களத்துடன் கலந்துரையாடி அச்செலவினம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் பின்னர் நி.பி 66 இன் மூலம் தேவையான அங்கீகாரத்திற்காக வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) 2018 ஆம் ஆண்டில் நி.பி 66-69 நிதிஏற்பாட்டின் கீழ் 03 செலவின விடயங்களின் நிதிஏற்பாடு 02 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை குறைப்பதற்கும் 05 செலவின விடயங்களின் நிதிஏற்பாட்டை 07 சதவீதம் முதல் 146 சதவீதம் வரை அதிகரிப்பதற்கும் நேர்ந்திருந்தது. | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகவும் செயற்திறனாகவும் தயாரிப்பதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு செலவின விடயத்திற்காக மேலதிக நிதிஏற்பாடு தேவை மற்றும் சேமிப்புக்கள் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிஏற்பாடு மாற்றல் மேற்கொள்ளப்பட்டது. |
| (இ) 2018 ஆம் ஆண்டில் மொத்த மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 4.08 மில்லியன் நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும், அதில் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டின் 99 சதவீதம் ஆக இருந்தது. | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகவும் செயற்திறனாகவும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உங்களது அவதானிப்புடன் இணங்கின்றேன் |
| (ஈ) மீண்டெழும் நிதிஏற்பாடுகளில் பிரிமா லங்கா (தனியார்) கம்பனிக்காக ஐ.அ.டொலர் மில்லியன் 4 உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அந்நிறுவனத்துடன் | குறித்த சிக்கலை துரிதமாக தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சர்வதேச நடுத்தீர்ப்பின் போது பிரிமா லங்கா (தனியார்) கம்பனிக்காக ஐ.அ.டொலர் மில்லியன் 55 கொடுப்பனவு செய்வதற்கு அரசு இணங்கியிருந்ததுடன் |

| | | | |
|---|---|---|---|
| | இணக்கப்பாட்டு சிக்கல் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை | | அந்நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு இல்லாமையால் இப்பணத்தை கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. |
| (உ) | 2018 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 1,600,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அதில் நிதிஏற்பாடு சேமிப்பு தேறயி ஏற்பாடுகளில் 55 சதவீதமாக இருந்தது. | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாகவும் செயற்திறனாகவும் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | திட்டமிடப்பட்ட சில கொள்வனவுகளை மேற்கொள்ள முடியாமை காரணங்களாக இருந்தது. |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயன சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் 2014 சனவரி 01 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 6.4 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்களுக்காக கடப்பாடு ஏற்படுத்துவதற்கு முன்னர் அதற்காக உரிய செலவின விடயங்களில் போதியளவு நிதிஏற்பாடு உள்ளதாக உறுதிப்படுத்த வேண்டும். எனினும், 2018 ஆம் ஆண்டிற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 03 செலவின விடயங்களுக்காக ரூபா 88.723 பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | குறித்த நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை பிராகாரம் கடப்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முன்னர் அதற்காக உரிய செலவின விடயங்களில் போதியளவு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் பொறுப்புகளுக்கு உட்படுத்த வேண்டும். | இத்திணைக்களத்தில் மொத்த மீண்டெழும் நிதிஏற்பாடுகளை கருத்திற் கொள்ளும் போது திசெம்பர் மாதத்தில் கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்ட செலவினத்தை மேற்கொண்டிருந்தால் அதற்காக நி.பி 66 இன் கீழ் நிதிஏற்பாடு மாற்றிக் கொள்ள முடியும். அதன் பிரகாரம் நிதி ஏற்பாடு போதுமானதென குறிப்பிடுகின்றேன். |

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756 மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.5 ஆம் பந்தி | பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட கணிப்பீட்டு அறிக்கையில் காண்பிக்கப்பட்ட பரிந்துரை கணக்காய்வு திகதியான 2018 ஏப்ரல் 19 ஆந் திகதி வரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை யின் பிரகாரம் துரிதமாக செயற்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் சுற்றறிக்கை பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை பூர்த்தி செய்வதாக குறிப்பிடுகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் வருமான மதிப்பீடு செய்யும் போது முறையன மீளாய்வு செய்யாமலும், பகுப்பாய்வு செய்யாமை காரணமாக மீளாய்வாண்டின் ஆரம்ப வருமான மதிப்பீடு மற்றும் ஆண்டின் உள்ளவாறான வருமான விடயங்களுக்கு இடையே 20 சதவீதம் முதல் 2036 வரை சாதகமான விலகலொன்றும் 21-70 சதவீதம் வரை பாதகமான விலகலொன்று | நிதிப்பிரமாணம் 50 தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு சரியான வருமானம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டை தயாரிப்பதற்காக அடிப்படையான பொருளாதார கருதுகோளொன்றும் அதன் உள்ளவாறான பெறுமதிக்கு இடையே விலகலின் தாக்கம் மற்றும் புதிய வருமான வரிச் சட்டம் திருத்தம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமை |

| | | |
|---|---|---|
| அவதானிக்கப்பட்டது. | | போன்ற விடயங்கள் உள்ளவாறான பெறுமதிக்கு இடையே விலகலின் தாக்கம் மற்றும் புதிய வருமான வரிச் சட்டம் திருத்தம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமை போன்ற விடயங்கள் உள்ளவாறான வருமானம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்துடன் வேறுபடுவதற்கு அடிப்படையான தாக்க காரணியாக இருந்தது. |
| (ஆ) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த அறிக்கை 10 ஆந் திகதிய அல்லது அதற்கு முன்னர் I ஆம் இலக்க படிவம் பயன்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், இத்திணைக் களத்தினால் சுங்கத் திணைக்களத்திற்கும் மதுவரி திணைக்களத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தினால் சமர்ப்பிக்க வேண்டிய மாதாந்த அறிக்கை குறித்த சுற்றறிக்கையின் பிரகாரம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சகல வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மதுவரி திணைக்களத்திற்குரிய விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை வருமானத்தை அறவிடுவது தொடர்பாக இதுவரை எடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் விசாரிக்கப்பட்டுள்ளது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் கீழான குறிகாட்டிகளை பிரதானமாக கொண்டு திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணுதல் மற்றும் நேநாக்கங்களை அடைந்து கொள்வதற்காக 2019 ஆம் ஆண்டு வரையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அடைந்து கொள்ளக்கூடிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி உரிய திட்டங்களை தயாரித்தலும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் | 2019 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் 03 நோக்கங்களை நேரடியாக நிறைவேற்றுவதற்கு இத்திணைக்களத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். |